செ.வெ. எண்: 987

நாள்: 09/11/2010

த.தொ.நு துறை

# பத்திரிகைச் செய்தி

கடந்த 2010இல் கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், தமிழக அரசு 16-பிட்டு எழுத்துருவை (யூனிக்கோடு & TACE16) தமிழக அரசின் செந்தரமாக ஏற்று ஒரு அரசாணையை வெளியிட்டது. 8-பிட்டு எழுத்துருவிற்கு பதிலாக 16-பிட்டு எழுத்துருவை தமிழக அரசின் துறைகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தமிழ் எழுத்துருக்களையும் (Fonts), தமிழ் விசைப்பலகை இடைமுகம் (Keyboard Interface), எழுத்துரு மாற்றி (Font Converter) போன்றவற்றை உருவாக்கி இலவசமாக வழங்க வேண்டும் என அரசாணையில் கூறப்பட்டது.

இதனை செயல்படுத்த, தமிழக அரசு தீவிரமாக ஆராய்ந்து, ஐந்து உறுப்பினர் கொண்ட ஒரு தொழில்நுட்ப வல்லுநர்க்குழுவை முனைவர் ப.அர. நக்கீரன், இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம் அவர்களின் தலைமையில் அமைத்தது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக, இத்தொழில்நுட்ப வல்லுநர்க் குழு அனைத்து இயக்குதளங்களிலும் (Operating System) பயன்படுத்தப்படும் வகையில் தமிழ் எழுத்துரு மற்றும் தமிழ் விசைப்பலகை இடைமுகத்திற்கான வரையறைகளையும் தீர்மானித்து ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தைத் தயாரித்தது. இரண்டாம் கட்ட நடவடிக்கையாக எழுத்துரு மாற்றி தயாரிக்கும் பணியினை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது, முதற்கட்ட பணியான தமிழ் எழுத்துரு, தமிழ் விசைப்பலகை இடைமுகம் தயாரிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளியினை தமிழக அரசின் மின்-ஒப்பந்த இணையதளம் மற்றும் தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளங்களில் பதிவேற்றியுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளியின் கடைசி நாள் 24.11.2010 அன்று மாலை 5.00 மணி என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு, ஒப்பந்ததாரர்கள் கணினி எழுத்துரு வார்ப்பு மற்றும் விசைப்பலகை இடைமுக மென்பொருள் தயாரித்தலில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளாவது அனுபவமிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

இ. செல்வராஜ்
த.தொ.நு. துறை